DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் திங்கள்கிழமை 20ம் நாள் சாட்சியாகிய விஷ்ணுரவி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr-III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஷ்ணுரவி | வயது | 34 |
| த/பெ. | லோகநாதன் | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | இரண்டாம் நிலை காவலர் அரக்கோணம் கிராமிய காவல் நிலையம் |
| சமயம் | | தாலூக்கா | |

**S.T.C.72/2022**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்)

**முதல் விசாரணை 20.01.2025 அ.சா.2**

1. நான் தற்போது அரக்கோணம் கிராமிய காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். 01.04.2021ம் தேதி நான் மாலை 04.00 மணிக்கு அரக்கோணம் நாடாளுமன்ற தேர்தல் பறக்கும் படையில் நான் காவலராக பணியாற்றியபோது அம்பேத்கர் நகரில் பணபட்டுவாடா நடைபெறுவதாக தகவல் கிடைத்தது.

2. எங்களது பறக்கும் படை தலைமை அலுவலர் துரைபாபு அவர்களுடன் அம்பேத்கர் நகருக்கு நானும், காவலர் வெங்கடேசனும் ஆய்வுக்கு சென்றோம். பிரவீன்குமார் என்பவர் பொதுமக்களுக்கு பணம் கொடுத்துக்கொண்டிருந்தார். ரூபாய் 18,000/- பறிமுதல் செய்து அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம்.

3. நான் சாட்சியாக கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன் என்னிடம் காட்டப்படும் 1வதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இது தொடர்பாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்:**

4. நான் போலீஸ் விசாரணையில் எதிரி பொதுமக்களுக்கு பணம் கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் நான் தெரிவித்துள்ள வீடு யாருக்கு சொந்தமானது மற்றும் அதன் விலாசத்தை குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

5. கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டது. பணம் கொடுக்கப்பட்டதற்கு ஆதரவாக வீடியோவில் பதிவு செய்யப்பட்டதா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் பொய் சாட்சி என்பதால் தான் வீட்டின் விலாசம் மற்றும் உரிமையாளரின் பெயரை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை; இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Sd/-K.Ramkumar.M.L.,
Judicial Magistrate No.I
Arakkonam.